# தி இந்து நாளிதழ்

## டிஎன்பிஎஸ்சி | குரூப்- IV | மாதிரி வினா- விடை । 2016

### டிஎன்பிஎஸ்சி | குரூப்- IV | மாதிரி வினா- விடை 1: 10 லட்சம் பேர் போட்டிபோடும் தேர்வில் வெல்ல வேண்டுமா?

அரசுப் பணியில் சேர வேண்டும் என்பது இன்றைய இளைஞர்கள் பலரின் கனவு. சமூக அந்தஸ்து பணி பாதுகாப்பு, நல்ல சம்பளம் போன்ற காரணங்கள் இளைஞர்களை அரசு வேலை நோக்கி ஈர்க்கின்றன. தமிழக அரசுப் பணிக்கு தேவைப்படும் ஊழியர்களும், அலுவலர்களும் டிஎன்பிஎஸ்சி எனப்படும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாக தேர்வு செய்யப்படுகிறார்கள்.

அந்த வகையில், தமிழக அரசின் பல்வேறு துறைகளில் தற்போது காலியாகவுள்ள இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர், வரித்தண்டலர், நிலஅளவர், வரைவாளர் வரித்தண்டலர் ஆகிய பல்வேறு விதமான பதவிகளில் 5,451 காலிப் பணியிடங்களை நிரப்பும் வகையில் வரும் நவம்பர் 6-ல் நடைபெற உள்ள குரூப்-4 தேர்வுக்கான அறிவிக்கையை டிஎன்பிஎஸ்சி வெளி யிட்டுள்ளது.

குரூப்-4 தேர்வுக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதி 10-ம் வகுப்பு தேர்ச்சி ஆகும். தட்டச்சர், சுருக்கெழுத்து தட் டச்சர் பணிகளுக்கு மட்டும் கூடுதலாக தொழில்நுட்பத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தேர்வில் பங்கேற்பதற்கான குறைந்தபட்ச வயது வரம்பு 18 ஆகும். அதிகபட்சமாக பொதுப் பிரிவினருக்கு 30, பிசி, எம்பிசி வகுப்பினருக்கு 32, எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு 35 என வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தேர்வுக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியை (எஸ்எஸ்எல்சி) விட உயர் கல்வித்தகுதி (பிளஸ்2, பட்டப் படிப்பு, பட்டமேற்படிப்பு) பெற்றிருந்தால் பொதுப் பிரிவைச் சேர்ந்த ஆதரவற்ற விதவைகள் மற்றும் பிசி, எம்பிசி, எஸ்சி, எஸ்டி வகுப்பினருக்கு வயது வரம்பு எதுவும் கிடையாது. குறைந்தபட்ச கல்வித்தகுதி எஸ்எஸ்எல்சி தேர்ச்சி என்றாலும் கூட பெரும்பாலும் பிளஸ்-2 முடித்தவர்கள், பட்டதாரிகள், முதுகலை பட்டதாரிகள், எம்ஃபில் முடித்தவர்கள், பொறியியல் பட்டதாரிகள் என அனைத்து கல்வித் தகுதி உடையவர்களும் குரூப்-4 தேர் வுக்கு விண்ணப்பிக்கிறார்கள்.

**இவ்வாண்டு 12 லட்சம் பேர்**

கடந்த ஆண்டு நடத்தப்பட்ட குரூப்-4 தேர்வுக்கு 10 லட்சத்துக்கும் மேற் பட்டோர் விண்ணப்பித்தனர். தற்போது அறிவிக்கப்பட்டுள்ள குரூப்-4 தேர்வுக்கு ஏறத்தாழ 12 லட்சம் பேர் விண்ணப் பிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. காரணம், மத்திய அரசு ஊழியர்களுக்கு 7-வது ஊதியக்குழு பரிந்துரையின்பேரில் சம்பளம் உயர்த் தப்பட்டுள்ள நிலையில், விரைவில் தமிழக அரசு ஊழியர்களுக்கும் ஊதியம் திருத்தியமைக்கப்பட இருக்கிறது. குரூப்-4 தேர்வுக்கு நேர்முகத் தேர்வு கிடையாது. எழுத்துத் தேர்வில் வெற்றிபெற்றாலே அரசு வேலை உறுதி. எனவேதான், குரூப்-4 தேர்வுக்கு லட்சக்கணக்கான இளைஞர்கள் முட்டி மோதுகிறார்கள்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள குரூப்-4 பணிகளுக்கான எழுத்துத் தேர்வு நவம்பர் 6-ம் தேதி தமிழகம் முழுவதும் ஏராளமான மையங்களில் நடைபெற இருக்கிறது. இதற்கு செப்டம்பர் 8-ம் தேதிக்குள் டிஎன் பிஎஸ்சி இணையதளத்தின் (www.tnpsc.gov.in) மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

எழுத்துத் தேர்வுக்கு மொத்தம் 300 மதிப்பெண். அப்ஜெக்டிவ் (கொள்குறி வகை) முறையில் 200 கேள்விகள் கேட்கப்படும். பொது அறிவு மற்றும் திறனறிவு (ரீசனிங்) பகுதியில் 100 வினாக்களும், பொது தமிழ்

அல்லது பொது ஆங்கிலம் பகுதியில் 100 வினாக்களும் இருக்கும். ஒரு கேள்விக்கு 1.5 மதிப்பெண் வீதம் 200 கேள்விகளுக்கு 300 மதிப்பெண்.

பொது அறிவு பகுதியானது அனை வருக்கும் பொதுவானது. பொது தமிழ், பொது ஆங்கிலம்-இரண்டில் ஏதாவது ஒன்றை விண்ணப்பதாரர்கள் தேர்வுசெய்து கொள்ளலாம். பெரும்பாலான விண்ணப்ப தாரர்கள் குறிப்பாக கிராமப்புறங்களைச் சேர்ந்த இளைஞர்கள் பொது தமிழ் பாடத்தைத்தான் விருப்பமாக தேர்வுசெய்கிறார்கள்.

**போட்டித் தேர்வின் உத்திகள்**

12 லட்சம் பேர் விண்ணப்பிப்பதால் போட்டி கடுமையானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனினும் இதில் 12 லட்சம் பேருமே உண்மையான போட்டியாளர்களாக இருக்க முடியாது. அரசு வேலை என்ற ஆசையில் நாமும் எழுதிப் பார்ப்போமே என விண்ணப்பிப்ப வர்களும், தேர்வுக்கான தயாரிப்பே இல்லாமல் எழுதுபவர்களும் இதில் பெரும்பான்மையினராக இருப்பர்.

டிஎன்பிஎஸ்சி நடத்தி வரும் போட்டித் தேர்வுகளுக்காக முழுமை யான தயாரிப்பில் உள்ளவர்கள் மத்தியில் தான் உண்மையான போட்டி இருக்கும். எனவே எண்ணிக்கையை கண்டு அஞ்ச வேண்டியதில்லை. இன்று முதல், இருக்கும் காலத்தை துல்லியமாக திட்டமிட்டு பயன் படுத்தி தயாரிப்பில் ஈடுபட்டாலே வெற்றி வசப்படும். முதல் கட்டமாக தமிழ்நாடு அரசு பாடநூல் கழகத்தின் 6-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரையிலான தமிழ் அல்லது ஆங்கிலம், அறிவியல், சமூக அறிவியல் பாடங்களை முழுமையாக படிக்க வேண்டும். 10-ம் வகுப்பு தரத்தில்தான் தேர்வு இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். எனினும், வெற்றிக்கான மதிப்பெண்ணை தரும் கேள்விகள் சில நேரங்களில் 11 மற்றும் 12-ம் வகுப்பு பாடங்களில் இருந்தும் கேட்கப்படலாம் என்பதால் அடுத்த கட்டமாக மேல்நிலைப் பள்ளி பாடங்களை படிப்பது கூடுதல் சிறப்பு.

நாட்டு நடப்புகள், கணிதம், திறனறிவு, அறிவியல் உள்ளிட்ட பாடங்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை இனிவரும் காலங்களில் துறைசார் வல்லுநர்கள் விளக்குவார்கள். அவர் களின் வழிகாட்டுதலின்படி தயாரிப்பில் ஈடுபட்டாலே போதும். எனினும், தயாரிப் பின் தொடக்கம் என்பது மாநில கல்வி வாரியத்தின் பாடத்திட்டங்களை படிப் பதில் இருந்து தொடங்குவதே நலம்.

மாநில நிர்வாகம், மாவட்ட நிர்வாகம், சுற்றுலாத் தலங்கள், முக்கிய இடங்கள் என தமிழ்நாட்டை மையமாக வைத்து அதிக கேள்விகள் கேட்கப்படும் என்ப தால் தமிழகம் குறித்த பொது அறிவு புத்தகத்தை வாங்கி படிப்பது அவசியம். கணிதம் மற்றும் திறனறிவு பகுதியில் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளும் கேள்விகள் கேட்கப்படும். இப்பகுதியில் வெளியாகும் கணித மாதிரி வினா - விடைகளை தொடர்ச்சியாக முயன்று பார்ப்பது நேர மேலாண்மைக்கு உதவும்.

**வெற்றிக் கொடி கட்டலாம்**

‘வெற்றிக்கொடி’ பகுதி மூலம் உயர் கல்வி, வேலைவாய்ப்பு தொடர்பாக எண்ணற்ற தகவல்களை மாணவ சமுதாயத்துக்கு வாரி வழங்கிக் கொண் டிருக்கும் ‘தி இந்து’ நாளிதழ், குரூப்-4 தேர்வுக்குப் படித்துக் கொண்டிருக்கும் மாணவ - மாணவிகளுக்கு உதவும் வகையில் கடந்த ஆண்டு மாதிரி வினா - விடைகளை வெளியிட்டது.

டிஎன்பிஎஸ்சி தேர்வுகளில் நீண்ட நெடிய அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் மாதிரி வினா - விடைகளுடன் பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினர். இதற்கு இளைஞர்களிடம் இருந்து ஏகோபித்த ஆதரவும் கிடைத்தது. கடந்த ஆண்டைப் போல இந்த ஆண்டும் குரூப்4 தேர்வுக்கு தயாராகும் இளை ஞர்கள் பயன்பெறும் வகையில் மாதிரி வினா-விடைகளையும், அரிய ஆலோ சனைகளையும் வழங்க இருக்கிறோம்.

வாரத்தில் புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய 4 நாட்கள் இப்பகுதி வெளியாகும். அனுபவம் பெற்ற நிபுணர் கள், துறை வல்லுநர்கள் வினா-விடை களை தொகுத்து வழங்க உள்ளனர். வெறும் வினா - விடைகள் மட்டுமல்லாமல் தேர்வுக்கு தயாரா வோருக்குப் பெரிதும் பயன்தரக் கூடிய தயாரிப்பு உத்திகளும், விளக் கங்களும் வழங்கப்பட உள்ளன.

டிஎன்பிஎஸ்சி | குரூப்- IV | மாதிரி வினா- விடை 2: தேர்வுக்கு தயாராவது எப்படி?

சுயவேலைவாய்ப்பு, தனியார்துறை வேலைவாய்ப்பு என எத்தனையோ வழிகள் இருப்பினும் அரசு வேலை என்பது எப்போதுமே வசீகரிக்கும் கனவாகவே நீடிக்கிறதுநிரந்தர வேலை ., நல்ல ஊதியம், பதவி உயர்வு, சமூக அந்தஸ்து என அனைத்தும் ஒருங்கே அமைவதால் இன்று வரை கிராமப்புறம் முதல் நகரம் வரை இளைஞர்கள் அரசு வேலைவாய்ப்புக்கு முயற்சிக்கிறார்கள்.

தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை, வேலைவாய்ப்புக்கான தேடலில் இளைஞர்களின் அட்சய பாத்திரமாக டிஎன்பிஎஸ்சி விளங்குகிறது. பட்டப்படிப்பு முடித்தவர்கள் முதல் பத்தாம் வகுப்பு தேறியவர் வரை அனைவருக்குமான தேடலுக்கும் உதவும் வாய்ப்பு வங்கியாக செயல்படுகிறது.

அந்த வகையில், 5,451 காலியிடங்களை நிரப்பும் வகையில் குரூப்-4 தேர்வுக்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. இத்தேர்வில் வெற்றி பெற்றால் ரூ.15,000 முதல் ரூ.18,000 வரை சம்பளத்துடன் கூடிய அரசு வேலை நிரந்தரமாகும்.

தேர்வுக்கு இணையத்திலேயே (www.tnpsc.gov.in) பதிவு செய்து கொண்டு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப் பிப்பதற்கான கடைசி நாள் செப்டம்பர் 8-ம் தேதி ஆகும். நவம்பர் 6-ம் தேதி எழுத்துத்தேர்வு. எனவே, 3 மாதங்களே தயாரிப்புக்கான அவகாசமாக உள்ளது.

**என்னென்ன படிக்க வேண்டும்**

மொத்தம் 200 கேள்விகள் (கொள்குறி வகை) ஒரு கேள்விக்கு ஒன்றரை மதிப் பெண் வீதம் மொத்தம் 300 மதிப்பெண். பொதுத் தமிழ் அல்லது பொது ஆங்கிலம் பகுதியில் 100 வினாக்களும், பொது அறிவு பகுதியில் 100 வினாக்களும் கேட்கப்படும். பொது அறிவு பகுதியில் 75 வினாக்கள், பொது அறிவு தொடர்பானதாகவும், 25 வினாக்கள் திறனறிவு சம்பந்தப்பட்டதாகவும் இருக்கும். பொது அறிவு என்று சொல்லும்போது அதில், அறிவியல், வரலாறு, புவியியல், நடப்பு நிகழ்வுகள், இந்திய அரசியலமைப்பு போன்ற பகுதிகளில் இருந்து கேள்விகள் கேட்கப்படும்.

**கணிதம்**

இதில் எண்கள், சுருக்குதல், சதவீதம், மீ.சி.ம, மீ.பெ.வ, விகிதம், தனிவட்டி, கூட்டு வட்டி, பகடை, தொடர் வரிசை போன்றவை இடம்பெறும். கணிதத்தில் சுருக்கமான முறைகளை வீட்டிலேயே தினமும் பயிற்சி செய்ய இணையதளத்தில் நிறைய காணொலிகள் உள்ளன. அதன்படி தினமும் முயற்சித்தால் 25 கேள்விகளுக்கும் சுலபமான முறையில் விடையளிக்க ஏதுவானதாக இருக்கும்.

**அறிவியல்**

இயற்பியலில் கண்டுபிடிப்புகள், காந்தம், சூரிய குடும்பம், மின் அறிவியல் போன்றவை பற்றியும், வேதியியலில் அமிலங்கள், காரம், தனிமம், உரங்கள், ஆக்ஸிஜனேற்றம், ஒடுக்கம் ஆகியவையும்,

உயிரியலில் சுவாசம், செல், ஒளி சேர்க்கை, வைட்டமின்கள், வைரஸ், பாக்டீரியா நோய்கள் போன்றவையும் படிக்க வேண்டும். உதாரணமாக,

மின்தடையின் அலகு என்ன?

மரங்களின் உறுதிக்கு காரணமான திசுக்கள் யாவை?

சுவாசித்தலின்போது வெளிப்படும் ஆற் றல் எந்த வடிவில் சேமிக்கப்படுகிறது

போன்ற கேள்விகள் கேட்கப்படுகின்றன.

**வரலாறு**

வரலாறைப் பொருத்தவரையில் வேத காலம், புத்த மற்றும் ஜைன மதம், முகலாய பேரரசு, பாமினி பேரரசு, சேர, சோழ, பாண்டியர், பல்லவர்கள் கால வரலாறு, கலை மற்றும் சிற்பங்கள், இந்திய சுதந்திர போராட்ட வரலாறு, தலைவர்கள் தோற்று வித்த இயக்கங்கள், நாளிதழ்கள் போன் றவை கேட்கப்படும். இது தவிர தமிழக மற்றும் இந்தியப் பண்பாடு குறித்த 5 கேள்விகள் கேட்கப்படுகின்றன. உதாரணமாக,

போர்ச்சுகீசியர்களின் வாணிப தளம் எங்குள்ளது?

இன்றைய கர்னாடக இசை தோன்றிய காலம்?

ஹரப்பா மக்கள் முதலில் பயிரிட்டது எது?

விதவை மறுமணத்தை ஆதரித்த தலைவர் யார்?

போன்ற கேள்விகள் வருகின்றன.

**புவியியல்**

புவியியலில், புவியமைப்பு, ஆறுகள், தனிமங்கள் கிடைக்கப் பெறும் இடங்கள், இயற்கை சீற்றங்கள், பருவகால நிலைகள் போன்றவை முக்கியத்துவம் பெறுகின்றன. உதாரணமாக:-

புவியின் உள்ளடுக்கில் குழம்பு நிலையிலுள்ள அடுக்கு எது?

உலகின் மிக ஆழமான அகழி எங்கு அமைந்துள்ளது போன்ற கேள்விகள் மிகவும் அடிப்படையான நிலையிலேயே கேட்கப்படுகின்றன.

**அரசியலமைப்பு**

இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள், அரசு நெறிமுறைக் கோட் பாடுகள், அடிப்படைக் கடமைகள் ஷரத்து கள், நாடாளுமன்ற அமைப்பு, குடியரசுத் தலைவர், ஆளுநரின் அதிகாரங்கள் போன்றவற்றில் இருந்து கேள்விகள் வர அதிக வாய்ப்புகள் உள்ளன. உதாரணமாக

மக்களாட்சியின் தத்துவம் யாது?

நேபாளம் சமீபத்தில் எத்தகைய அரசியலமைப்பை ஏற்றது?

இந்திய அரசியலமைப்பின் 8-வது அட்டவணை எதைக் குறிக்கிறது? போன்றவை கேட்கப்படுகின்றன.

நடப்பு நிகழ்வுகள்

ஓராண்டு முழுவதும் நடந்த உலக, தேசிய, மாநில நிகழ்வு, கண்டுபிடிப்புகள், புத்தகங்கள், விருதுகள், விளையாட்டு, இயற்கை சீற்றம், ஒப்பந்தங்கள், நியமனங்கள் ஆகி யவற்றைப் படித்திருப் பது அவசியம். உதாரணமாக,

உசைன் போல்ட் எந்த விளை யாட்டுடன் தொடர்புடையவர்?

சந்திரயான்-1 எதற்காக ஏவப்பட்டது? போன்ற சமீப நிகழ்வுகளில் இருந்து கட்டாயம் கேள்விகளை எதிர் பார்க்கலாம்.

**எப்படி படிக்கலாம்?**

5-ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரையிலான சமச்சீர் கல்வி பாடப் புத்தகங்களையும், 'இந்து' (ஆங்கிலம் அல்லது தமிழ்) போன்ற தினசரி நாளிதழ்களையும் படிப்பது அவசியம். பொதுத்தமிழ் பகு திக்கு 5 முதல் 10-ம் வகுப்பு வரையிலான பாடப் புத்தகங்களில் உள்ள இலக்கணம் படித்தால் போதுமானது. நடப்பு நிகழ் வுக்கு நாளிதழ் மற்றும் ஏதேனும் இரண்டு இணையதளங்களைப் பின்பற்றலாம்.

கால அட்டவணையிட்டு படித்தல் மிக அவசியம். மூன்று மாதங்களை சரியான முறையில் பிரித்து அனைத்து பாடத் திட்டங்களையும் தயார்படுத்த வேண்டும். கடந்த ஆண்டு வினாத் தாள்களை மீண் டும் மீண்டும் ஆராய்தல் அவசியம். குறிப்பிட்ட சில கையேடுகளைத் தரமறிந்து வாங்கிப் படித்தால் தேவை யற்ற குழப்பங்களைத் தவிர்க்கலாம். குறித்தபடி 3 மணி நேரத்தில் தேர்வை முற்றிலும் எழுதி முடிக்க பயிற்சி அவசியம். தினமும் மாதிரி வினாத்தாள் பயிற்சியே கணிதத்துக்கு போதுமானது. தினசரி மாதிரி பயிற்சி வினாத் தாள்களை கால அவகாசத்தினை மனதிற் கொண்டு விடையளிப்பது தேர்விலும் கால அவகாசத்திற்குள் தேர்வை முடிக்க உதவும். மனதை அமைதியுடன் வைக்க சிறிது நேர தியானம் அல்லது யோகா செய்வது நினைவுத் திறனையும் அதிகரிக்கும். தேர்வுக்கான தயாரிப்பைத் தொடங்க சரியான திட்டமிடுதலும், வழிகாட்டலும், தேர்வு முறை பற்றிய புரிதலும் தேவை. தயாரிப்பை தொடங்கிய பின் கடின உழைப்பும், நினைவாற்றலும், பயிற்சி யும் தேவை. தேர்வின் போது சமயோசித ஆற்றலும், நேர மேலாண்மையும் சிந்திக்கும் தன்மையுமே பிரதானம்.

இவற்றை மனதில் இருத்தி படிக்கத் தொடங்குங்கள். வெற்றி நிச்சயம். அரசுப் பணியாளராக வாழ்த்துக்கள்.

**1. பூமியின் வடிவமானது**

(a) கோள வடிவம்

(b) ஜியாய்டு வடிவம்

(c) முட்டை வடிவம்

(d) நீண்டகோள வடிவம்

**2. பின்வருவனவற்றுள் எந்த நேரக்கோடு இந்திய அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது?**

(a) 53.5 கி

(b) 82.5 மே

(c) 53.5 மே

(d) 82.3 கி

**3. வளிமண்டலத்தில் காற்று சுழற்சி எதன் அடிப்படையில் சுழல்கிறது?**

(a) பூமியின் சுழற்சி

(b) தோன்றக்கூடிய அழுத்த மண்டலம்

(c) கண்டத்துக்கும் கடலுக்கும் உள்ள பரவல்

(d) எதுவும் இல்லை

**4. ஒரு நாட்டில் மக்கள் தொகைக்கும் அந்நாட்டில் உள்ள நிலப்பகுதிக்கும் இடைப்பட்ட விகிதம் எவ்வாறு அழைக்கப்படுகிறது.**

(a) மக்கள் தொகை அடர்த்தி

(b) மக்கள் தொகை குறியீடு

(c) மக்கள் தொகை பரவல்

(d) பாலின விகிதம்

**5. சூரிய குடும்பத்தில் காணப்படும் மிகப் பெரிய கோள் எது?**

(a) புதன்

(b) வெள்ளி

(c) சனி

(d) வியாழன்

**6. உலகிலேயே மிகப்பெரிய தீவு**

(a) மடகாஸ்கர்

(b) கிரேட் பிரேட்டன்

(c) கிரீன்லாந்து

(d) நியூ கினியா

**7. ஆரவல்லி மலை எப்பொழுது உருவானது?**

(a) மீசோசோயிக் சகாப்தம்

(b) டெர்சியரி சகாப்தம்

(c) பிரிகேம்ப்ரியான் சகாப்தம்

(d) லேட் பிரிகேம்ப்ரியான் சகாப்தம்

**8. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது தீபகற்ப பீடபூமியில் காணப்படுவதில்லை**

(a) ஆரவல்லிஸ்

(b) பூர்வாஞ்சல்

(c) மால்வா பீடபூமி

(d) தக்காண பீடபூமி

**9. உலகிலேயே மூன்றாவது உயரமான கஞ்சன் ஜங்கா சிகரம் எங்கு உள்ளது?**

(a) ஜம்மு காஷ்மீர்

(b) உத்தரகாண்ட்

(c) சிக்கிம்

(d) அருணாச்சலப்பிரதேசம்

**10. இந்தியாவில் எது நகர மாநிலமாக உள்ளது?**

(a) சண்டிகார்

(b) சத்தீஸ்கார்

(c) டெல்லி

(d) டேராடூன்

**11. பொருத்துக**

A. ஹரப்பா 1. பி.பி.லால்

B. லோத்தல் 2. ஜே.பி. ஜோ

C. காலிபங்கன் 3. சர் ஜான் மார்ஷல்.

D. தொளவீரா 4. எஸ்.ஆர். ராவ்

கீழ்கண்டவற்றுள் சரியான குறியீடுகளை தேர்ந்தெடுக்கவும்

(a) 3 1 4 2

(b) 3 4 1 2

(c) 4 3 2 1

(d) 4 2 3 1

**12. பொருத்துக**

A. முதல் புத்த மாநாடு - 1. பாடலி புத்திரம்

B. 2ம் புத்த மாநாடு - 2. இராஜகிருகம்

C. 3ம் புத்த மாநாடு - 3. குண்டலவனா

D. 4ம் புத்த மாநாடு - 4. வைசாலி

கீழ்கண்டவற்றுள் சரியான குறியீடுகளைத் தேர்ந்தெடுக்கவும்

(a) 2 1 4 3

(b) 2 4 1 3

(c) 1 4 2 3

(d) 1 4 3 2

**13. இந்தியாவின் மாக்கியவல்லி எனப்படுபவர் யார்?**

(a) மெகஸ்தனிஸ்

(b) **கவுடில்யா**

(c) ஃபாஹியான்

(d) யாரும் இல்லை.

**14. ஏக பிராமணா என்ற பட்டத்தை யார் பெற்றார்?**

(a) **கவுதமிபுத்திரா சதகர்னி**

(b) சிமுகா

(c) வசிட்ட புத்திர புலுமாயி

(d) எதுவும் இல்லை.

**15. மத்தவிலாசபிரகாசனம் எந்த மொழியில் எழுதப்பட்டது**

(a) தமிழ்

(b) பிராகிருதம்

(c) சமஸ்கிருதம்

(d) தெலுங்கு

**16. கவிராஜமார்கம் என்ற நூல் யாரால் எழுதப்பட்டது**

(a) வீராச்சார்யா

(b) மூன்றாம் கிருஷ்ணா

(c) அமோகவிருத்தி

(d) முதலாம் அமோகவர்

**17. எந்த முஸ்லீம் அரசர் இந்துக்களை ஜிம்மி என்றும் அவர்கள் மீது ஜிஸியா என்ற வரி விதிப்பையும் முதலில் அறிமுகப் படுத்தினார்?**

(a) இல்துமிஷ்

(b) முகமது பின் காசிம்

(c) கோரி முகமது

(d) கஜினி முகமது

**18. எந்த டெல்லி சுல்தான் வேளாண்மையை ஊக்குவிக்க எண்ணி தக்காவி என்ற வேளாண்மை கடன்களை வழங்கினார்**

(a) ஐபக்

(b) அலாவுதீன் கல்ஜி

(c) முகமது பின் துக்ளக்

(d) பிரோஸ் துக்ளக்

**19. பின்வரும் எந்தத் திட்டத்தில் நிலத்தின் உற்பத்தியின் அடிப்படையில் வருவாய் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது?**

(a) ரயத்துவாரி முறை

(b) மகல்வாரி முறை

(c) நிலையான நிலவரித்திட்டம்

(d) ஐந்தாண்டு நிலவரித்திட்டம்

**20. பொருத்துக**

A. மெக்காலே அறிக்கை - 1. கி.பி.1904

B. உட்ஸ் அறிக்கை - 2. கி.பி.1882

C. ஹண்டர் ஆணையம் - 3. கி.பி.1854

D. இந்திய பல்கலை. சட்டம் - 4. கி.பி.1835

(a) 1 2 3 4

(b) 3 2 1 4

(c) 4 3 2 1

(d) 1 4 3 2

**21. பின்வருபவர்களில் யார் மிதவாதிகள் தலைவர் இல்லை?**

(a) தாதாபாய் நவுரோஜி

(b) எம்.ஜி.ரானடே

(c) கோபால கிருஷ்ண கோகலே

(d) திலகர்

**22. வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றிய நாள்**

(a) 8 ஆகஸ்ட் கி.பி.1940

(b) 10 ஆகஸ்ட் 1939

(c) 8 ஆகஸ்ட் கி.பி. 1942

(d) ஏதுவுமில்லை

**23. எந்த அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் மூலம் சிக்கிம் இந்தியாவின் கூட்டாட்சி மாநிலமாக இணைக்கப் பட்டது?**

(a) 1972, 30-வது சட்டத்திருத்தம்

(b) 1973, 32-வது சட்டத்திருத்தம்

(c) 1974, 35-வது சட்டத்திருத்தம்

(d) 1975, 33-வது சட்டத்திருத்தம்

**24. கலாச்சார மற்றும் கல்வி உரிமைகளை வழங்கும் ஷரத்துகள் எவை?**

(a) ஷரத்து 25-28

(b) ஷரத்து 29-30

(c) ஷரத்து 23-24

(d) ஷரத்து 32

**25. எந்த அரசியலமைப்பு சட்டதிருத்தம் மூலம் சொத்துரிமை அடிப்படை உரிமையிலிருந்து வெளியில் கொண்டு செல்லப்பட்டது?**

(a) 42-வது சட்டத்திருத்தம் கி.பி.1976

(b) 44-வது சட்டத்திருத்தம் கி.பி.1978

(c) 73-வது சட்டத்திருத்தம் கி.பி.1992

(d) 74-வது சட்டத்திருத்தம் கி.பி.1992

**26. நெறிமுறை கோட்பாடுகள் இதனை அடிப்படையாக கொண்டது**

(a) காந்திய கொள்கைகள்

(b) பரந்த-அறிவுசார் கொள்கைகள்

(c) சமூகவியல் கொள்கைகள்

(d) மேற்கூறிய அனைத்தும்.

**27. நாடாளுமன்றத்தின் கூட்டமர்வு யாரால் கூட்டப்படும்?**

(a) மக்களவை சபாநாயகர்

(b) பிரதமர்

(c) குடியரசுத் தலைவர்

(d) மாநிலங்களவை தலைவர்

**28. ஒரு மசோதாவை பண மசோதா (அல்லது) மற்ற மசோதா என தீர்மானிப்பது யார்?**

(a) சபாநாயகர்

(b) ஜனாதிபதி

(c) பிரதமர்

(d) மாநிலங்களவை தலைவர்

**29. மாநில அரசுத் தலைமை வழக்கறிஞரை நியமனம் செய்வது?**

(a) இந்திய தலைமை நீதிபதி

(b) பிரதமர்

(c) மாநில ஆளுநர்

(d) சபாநாயகர்

**30. எந்த மாநிலத்தில் முதன்முதலாக ஊராட்சி அரசாங்கம் அறிமுகப்படுத்தப்பட்டது?**

(a) குஜராத்

(b) ராஜஸ்தான்

(c) பீகார்

(d) ஆந்திரப்பிரதேசம்

**31. தமிழ்நாட்டில் பஞ்சாயத்து சமிதியின் தலைவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?**

(a) அமைச்சர்

(b) சேர்மன்

(c) மேயர்

(d) அங்கத்தினர்

**32.சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை எப்போது தொடங்கப்பட்டது?**

(a) 2001

(b) 2002

(c) 2003

(d) 2004

**34. ஒரு புவி நிலை செயற்கைக் கோளின் சுற்றுக்காலம்**

(a) 24 மணிநேரம்

(b) 30 நாட்கள்

(c) 365 நாட்கள்

(d) தொடர்ந்து மாறும்

**35.ஒலி அதிவேகமாக பயணிப்பது எவற்றில்**

(a) வெற்றிடத்தில்

(b) காற்றில்

(c) தண்ணீரில்

(d) இரும்பில்

**36. முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட பூஞ்சைக் கொல்லி எவை?**

(a) போர்டியாக்ஸ் கலவை

(b) டிடிடீ (DDT)

(c) நைட்ரஜன்

(d) சுரமின் பூ

**37. வளர்சிதை மாற்றத்தை உண்டாக்கும் நொதிகளை தூண்டிவிடும் முக்கிய நொதிகள் கிடைப்பது?**

1. ரிபோஃளேவின்.
2. நிக்கோடின்மைடு.
3. அஸ்கார்பிக் அமிலம்.
4. குளுட்டமேட்

மேலே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியானவற்றை தேர்ந்தெடு

(a) 1 மற்றும் 2

(b) 2 மற்றும் 3

(c) 3 மற்றும் 4

(d) 1 மற்றும் 4.

**38. பின்வருவனவற்றுள் துணைக்கோள்கள் இல்லாதவை எவை?**

1. செவ்வாய்

2. வெள்ளி

3. புதன்

4. நெப்டியூன்

மேலே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியானவற்றை தேர்ந்தெடு

(a) 1 மற்றும் 2 (b) 2 மற்றும் 3

(c) 1 மற்றும் 3 (d) 2 மற்றும் 4

***விடைகள்:*** 1.b 2. d 3. d 4. a 5. d 6. c 7. c 8. b 9. c 10. c 11. b 12. b 13. b 14. a 15. c 16. d 17. b 18. c 19. b 20. c 21. d 22. c 23. c 24. b 25. b 26. d 27. c 28. a 29. c 30. b 31. b 32. d 33. c 34. a 35. d 36. a 37. a 38. b

டிஎன்பிஎஸ்சி | குரூப்- IV | மாதிரி வினா- விடை 4: பொது அறிவு

***Please Refere to this Website -***
http://tamil.thehindu.com/general/education/%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%8E%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%8E%E0%AE%B8%E0%AF%8D%E0%AE%9A%E0%AE%BF-%E0%AE%95%E0%AF%81%E0%AE%B0%E0%AF%82%E0%AE%AA%E0%AF%8D-iv-%E0%AE%AE%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF-%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A9%E0%AE%BE-%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%9F%E0%AF%88-4-%E0%AE%AA%E0%AF%8A%E0%AE%A4%E0%AF%81-%E0%AE%85%E0%AE%B1%E0%AE%BF%E0%AE%B5%E0%AF%81/article9084721.ece

டிஎன்பிஎஸ்சி | குரூப்-IV | மாதிரி வினா-விடை 5: பொது அறிவு

**74. பொருத்துக**

| | |
|---|---|
| A. சுதந்திர உரிமை | 1. ஷரத்து 23-24 |
| B. சமத்துவ உரிமை | 2. ஷரத்து 32 |
| C. சுரண்டல் எதிர்ப்பு | 3. ஷரத்து 19-22 |
| D. அரசியலமைப்பு தீர்வுக்கு | 4. ஷரத்து 14-18 |

(a) 2 1 3 4

(b) 1 2 3 4

(c) 3 4 1 2

(d) 3 1 4 2

**75. எந்த ஷரத்தானது நீதித்துறையை நிர்வாக துறையில் இருந்து பிரித்துள்ளது?**

(a) ஷரத்து 47

(b) ஷரத்து 49

(c) ஷரத்து 50

(d) ஷரத்து 51

**76. கல்வி என்ற பொருள் எந்தப் பட்டியலில் வருகிறது?**

(a) மாநில பட்டியல்

(b) மத்திய பட்டியல்

(c) பொது பட்டியல்

(d) எதுவுமில்லை

**77. இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள நதி நீர் பிரச்சினையை பற்றி கூறும் ஷரத்து?**

(a) ஷரத்து 262

(b) ஷரத்து 263

(c) ஷரத்து 272

(d) ஷரத்து 250

**78. மூன்றடுக்கு ஊராட்சி முறையைப் பரிந்துரைத்தவர்**

(a) அசோக் மேத்தா

(b) எஸ்.கே. டே

(c) பல்வந்த்ராய் மேத்தா

(d) கிருஷ்ணமாச்சாரி

**79. நிதி மசோதா எந்த அவையில் அறிமுகப்படுத்தப்படுகிறது?**

(a) லோக் சபாவில் மட்டும்

(b) ராஜ்ய சபாவில் மட்டும்

(c) லோக் சபா மற்றும் ராஜ்ய சபாவில்

(d) இவற்றுள் எதுவுமில்லை

**80. ஒரு மாநிலத்தின் சட்டசபையைக் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு அளிக்கும் குடியுரிமை சட்டத்தின் பிரிவு எது?**

(a) பிரிவு 256

(b) பிரிவு 356

(c) பிரிவு 254

(d) பிரிவு 354

**81. ஒரு நாட் (Knot) என்பது**

1. வானூர்தி மற்றும் கடலில் செல்லும் இயந்திரங்களின் வேகத்தை அளக்க உதவும் அலகு

2. இது ஒரு நாட்டிகல் (Nautical) மைல் ஒரு மணி நேரத்தில் பயணம் செய்வதற்கு சமம்.

3. இது 1.852 கி.மீ. / மணிக்கு சமம்

கீழ்க்கண்டவற்றுள் சரியானவற்றைத் தேர்ந்தெடு

(a) 1 மட்டும்

(b) 1 மற்றும் 2

(c) 1 மற்றும் 3

(d) மேற்கண்ட அனைத்தும்

**82. ஒரு பொருளின் திசைவேகம் இருமடங்கானால் அதன்**

1. முடுக்கம் இரு மடங்காகும்

2. உந்தம் இரு மடங்காகும்

3. இயக்க ஆற்றல் 4 மடங்காகும்

4. நிலை ஆற்றல் இரு மடங்காகும்

இவற்றுள் எது அல்லது எவை சரி?

(a) 2 மட்டும்

(b) 2 மற்றும் 3

(c) 3 மட்டும்

(d) 2 மற்றும் 4

**83. மின்காந்தத்தை உருவாக்க பொருத்த மான பொருள் எது?**

(a) தாமிரம்

(b) டங்க்ஸ்டன்

(c) தேனிரும்பு

(d) எஃகு

**84. பூமியின் பரப்பில் விழும் வான்பொருள் எது?**

(a) விண்வீழ் சிறுகல்

(b) எரிமீன்

(c) விண்வீழ் பெருகல்

(d) UFO

**85. உலர்ந்த முடியை கடினமான ரப்பர் சீப்பினால் சீவும் போது படபட வென சத்தம் கேட்பது எதனால்?**

(a) மின்னூட்டம் பெற்ற சீப்பின் மீது முடி மோதுவால்

(b) சிறிய மின் பொறிகளால்

(c) முடிமீது சீப்பினால் தேய்ப்பதால்

(d) மேற்கண்ட எதுவும் இல்லை.

**86. கீழ்க்கண்ட வாக்கியங்களை காண்க**

1. சையனோபாக்டீரியா உரமாக பயன்படுகிறது.

2. அவை நைட்ரஜனை தக்க வைக்கும் பாக்டீரியா ஆகையால் அவை உரமாக பயன்படுகிறது.

இதில் சரியான வாக்கியத்தை தேர்ந்தெடு:

(a) 1 மட்டும்

(b) 2 மட்டும்

(c) 1 & 2 இரண்டுமே

(d) 1 & 2 எதுவும் இல்லை

**87. உயிரியல் பொருத்தம் நைட்ரஜன் பாக்டீரியாக்கள் எவை?**

1. அனைபெனா

2. குளோரெல்லா

3. கிளாஸ்டிரிடியம்

4. நாஸ்டாக்

சரியான விடையை தேர்ந்தெடு:

(a) 1 & 3 மட்டும்

(b) 1, 3 & 4

(c) 2 & 4 மட்டும்

(d) 1 & 4 மட்டும்

**88. புதிதாக வெளியேற்றிய சிறுநீரில் எந்த நாற்றமும் வராது. ஆனால் சிறு நேரத்திற்கு பிறகு துர்நாற்றம் ஏற்படும். அவை எதனால் ஏற்படும்?**

(a) யூரியா சுழற்சியின் மூலம் யூரியா அமோனியாவாக மாறுவதால்

(b) பாக்டீரியாவினால் யூரியா அமோனியாவாக மாறுவதால்

(c) யூரிக் அமிலம் அமோனியாவாக மாறுவதால்

(d) யூரிக் அமிலம், யூரியா மற்றும் க்ரிடினைன் அமோனியாவாக மாறுதல்.

**89. பெண்களின் இரண்டாம் பால் பண்புகளை கட்டுப்படுத்த கீழ்க்கண்ட எந்த ஹார்மோன் உதவுகிறது?**

(a) அட்ரினல் கார்டக்ஸ்

(b) ஈஸ்ட்ரோஜென்

(c) டெஸ்டோஸ்டீரோன்

(d) புரோஜெஸ்ட்ரான்

**90. பெண் அனோபிலஸ் கொசு மலேரியாவை தவிர வேறு எந்த நோயை பரப்பும் காரணியாக திகழ்கிறது?**

(a) டெங்கு காய்ச்சல்

(b) ஃபிளாரியாசிஸ்

(c) என்செபாலிட்டிஸ்

(d) மஞ்சள் காய்ச்சல்

**91. சாராயம் ஏற்படுத்துபவை**

1. கல்லீரலின் கிர்ரோஹோசிஸ்

2. அக்கியூட் குளோமெருளோனெப்ரிட்டிஸ்

3. கார்டியோமையோபரி

4. வாய், பேரிங்ஸ், லேரிங்ஸ் மற்றும் ஈசோ பேகசின் புற்றுநோய்

(a) 1, 2 மற்றும் 4

(b) 2, 3 மற்றும் 4

(c) 1, 3 மற்றும் 4

(d) இவையனைத்தும்

**92. கடல் நீரிலிருந்து சாதாரண உப்பு பெறப்படும் முறை**

(a) பதங்கமாதல்

(b) ஆவியாதல்

(c) படிகமாக்கல்

(d) வடிகட்டுதல்

**93. வேலையின்மை விகிதம் மற்றும் பணவீக்கம் விகிதம் இடையேயான தொடர்பை விளக்குவது**

(a) லேட்டர் வளைவு

(b) ஏஜல்ஸ் விதி

(c) பிலிப்ஸ் வளைவு

(d) கிரஸாம் விதி

**94. சமூக பொருளாதார ஜாதி கணக் கெடுப்பு யாரால் எடுக்கப்படுகிறது?**

(a) ஊரக வளர்ச்சி துறை அமைச்சகம்

(b) உள்துறை அமைச்சகம்

(c) தேசிய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகம்

(d) திட்டக்குழு

**95. நிதி ஆயோக் (NITI AYOG) பற்றிய தவறான கூற்றைத் தேர்ந்தெடு**

(a) சமுதாய கூட்டு முயற்சி மற்றும் தொழில் முனைவோரின் உதவியுடன் அறிவாற்றல் மற்றும் கண்டுபிடிப்புகளை உருவாக்குதல்

(b) சமூகநீதி மற்றும் நவீன பொருளாதார மயமாக்குதல்

(c) கூட்டுறவு மற்றும் நவீன பொருளா தாரமயமாக்குதல்

(d) திட்டங்கள் செயல்படுவதை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல், தொழில் நுட்பத்தை மேம்படுத்துதல்

**96. இந்தியாவின் முதல் நவீன வங்கி எது?**

(a) ஹிந்துஸ்தான் வங்கி

(b) வங்காள வங்கி

(c) நியூ பேங்க் ஆப் இந்தியா

(d) இந்திய இம்பீரியல் வங்கி

**97. எப்போது ஆர்பிஐ பணச்சந்தை பரஸ்பர நிதியை அறிமுகப்படுத்தியது**

(a) 1990

(b) 1999

(c) 1992

(d) 1975

**98. மத்திய அரசு விதிக்காத வரி எது?**

(a) வருமான வரி

(b) சேவை வரி

(c) சுங்க வரி

(d) தொழில் வரி

**99. இவற்றில் மகசேசே விருது பெறாதவர் யார்?**

(a) அருணாராய்

(b) டி.எம்.கிருஷ்ணா

(c) எஸ். சந்திரசேகர்

(d) டாக்டர் வி. சாந்தா

**100. தமிழ்நாட்டின் பெர்னாட்ஷா என அழைக்கப்பட்டவர் யார்?**

(a) மு.வரதராசனார்

(b) வாணிதாசன்

(c) ம.பொ.சிவஞானம்

(d) கல்கி

**101. இந்தியாவின் ஆண்டு சராசரி மழைப் பொழிவு?**

(a) 125 செ.மீ

(b) 110 செ.மீ

(c) 140 செ.மீ

(d) 180 செ.மீ

102. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எவை உணவுப் பயிரில் இல்லாதது?

(a) நெல்

(b) கரும்பு

(c) கோதுமை

(d) திணை வகைகள்

103. எந்த வருடம் வனவிலங்கு சட்டம் இயற்றப்பட்டது?

(a) 1976

(b) 1972

(c) 1986

(d) 1982

104. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது காற்று மாசுபடுவதற்கு காரணமற்றது

(a) எரிமலை வெடிப்பு

(b) மகரந்த தூள் பரவுவது

(c) காற்றரிப்பு

(d) ஓசோன் சிதைவுறுதல்

105. கீழே கொடுக்கப்பட்டுள்ள சக்திகளில் எந்த சக்தி புதுப்பிக்க இயலாத சக்தி வளங்களைச் சாராதது?

(a) நிலக்கரி

(b) பெட்ரோலியம்

(c) இயற்கை வாயு

(d) உயிரி வாயு

**106. தமிழ்நாட்டில் நிலக்கரி அதிகம் காணப்படும் வகை**

(a) ஆந்த்ரசைட்

(b) பிட்டுமனஸ்

(c) லிக்னைட்

(d) பீட்

**107. செம்மண் முக்கியமாக எங்கிருந்து எடுக்கப்படுகிறது**

(a) மலையில் இருந்து

(b) ஆற்றிலிருந்து வரக்கூடிய வண்டல்கள்

(c) இரண்டும்

(d) ஒன்றும் இல்லை இரண்டும் இல்லை

**108. நாடாளுமன்ற உறுப்பினர் உள்நாட்டுப் பகுதி மேம்பாடு திட்டத்தின் நோக்கம் யாது?**

(a) கிராமப்புறங்களை மேம்படுத்துதல்.

(b) நகர்ப்புறங்களை மேம்படுத்துதல்.

(c) கிராமப்புறத்தையும் நகர்ப்புறத்தையும் மேம்படுத்துதல்.

(d) நீண்ட நாள் நிலையான வளர்ச்சி.

**109. பொருத்துக**

A. மகாவீரர் - 1. நன்மைகளை உருவாக்குபவர்

B. கைவல்யா - 2. துன்பத்திலிருந்து விடுதலை

C. நிர்காந்தர் - 3. மெய்யறிவு

D. ஜினர் - 4. தலைசிறந்த நாயகன்

குறியீடுகளை தேர்ந்தெடு:-

(a) 4 2 3 1

(b) 1 2 3 4

(c) 4 3 2 1

(d) 1 3 4 2

**விடைகள்:** 74.c 75.c 76.c 77.a 78.c 79.a 80.b 81.d 82.b 83.c 84.c 85.b 86.c 87.b 88.b 89.b 90.b 91.c 92.b 93.c 94.a 95.b 96.a 97.c 98.d 99.c 100.a 101. a 102.b 103.b 104.d 105.d 106.c 107.b 108.c 109.c

டிஎன்பிஎஸ்சி | குரூப்-IV | மாதிரி வினா- விடை 6: பொது அறிவு

**110. சந்திர குப்த மௌரியர் எந்த கிரேக்கரை வீழ்த்தினார்?**

(a) போரஸ்

(b) செலூக்கஸ்

(c) அலெக்சாண்டர்

(d) மேற்கண்ட எதுவும் இல்லை.

**111. எது எட்டுத் தொகை நூல் இல்லை?**

(a) நற்றிணை

(b) பரிபாடல்

(c) நெடுநல்வாடை

(d) குறுந்தொகை

**112. பொருத்துக - அரசர் கல்வெட்டு**

(a) சந்திர குப்தர் - 1 சோம்நாத் புத்த சிலை

(b) குமார குப்தர் - 2 சுபியா தூண் கல்வெட்டு

(c) ஸ்கந்த கும்தர் - 3 உதயகிரி குகை

(d) குமார குப்தர் II - 4 கர்மடோனா கல்வெட்டு

குறியீடுகளை தேர்ந்தெடு

(a) 1 3 4 2

(b) 3 4 2 1

(c) 3 1 2 4

(d)1 2 3 4

**113. முதலாம் மகேந்திரவர்மன் புதிய கட்டிடக் கலையைத் தொடங்கினார். இது பின்னாளில் இவ்வாறு அழைக்கப்பட்டது**

(a) நகரா கட்டிடக்கலை

(b) விசாரா கட்டிடக்கலை

(c) திராவிடக் கட்டிடக்கலை

(d) அனைத்து வகைகளையும் உள்ளடக்கியது

**114. சோழ அரசரின் மெய்க்காவல்படை எவ்வாறு அழைக்கப்பட்டது?**

(a) வேலைக்காரர்

(b) கைகோளப் பெரும்படை

(c) கடகம்

(d) a மற்றும் b

**115. ராஜேந்திர சோழனால் மகிபாலர் தோற்கடிக்கப்பட்டது எந்த கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது**

(a) மாமண்டூர் கல்வெட்டு

(b) வைகுண்டபெருமாள் கோயில் கல்வெட்டு

(c) முக்தீஸ்வரன் கோயில் கல்வெட்டு

(d) திருமலை கல்வெட்டு

**116. எந்த டெல்லி சுல்தான் தனது ஆட்சிப் பரப்பை இக்தாக்களாகப் பிரித்து அதற்கு இக்தாதாரரை நியமித்து சட்டம் ஒழுங்கு மற்றும் நிலவருவாய் பொறுப்பினை இக்தாக்களின் கட்டுப்பாட்டில் விட்டார்?**

(a) ஐபக்

(b) இல்துமிஷ்

(c) பால்பன்

(d) அலாவுதீன் கில்ஜி

**117. எந்த போர்களுக்குப் பின்னர் ஆங்கிலேயர்கள் திவானி உரிமையைப் பெற்றனர்?**

1. பிளாசிப்போர்
2. பக்சார் போர்
3. கர்நாடகப் போர்
4. மைசூர் போர்

(a) 1 மற்றும் 2

(b) 3 மற்றும் 4

(c) 4 மட்டும்

(d) எதுவுமேயில்லை

**118. இந்தியன் ஒபீனியன்-யாருடன் தொடர்புடையது.**

(a) ராஜேந்திர பிரசாத்

(b) தாதா பாய் நௌரோஜி

(c) எம்.கே.காந்தி

(d) எதுவுமேயில்லை

**119. பொருத்துக**

A. ஒத்துழையாமை இயக்கம் 1. கி.பி.1922

B. சைமன் குழு 2. கி.பி.1928

C. நேரு அறிக்கை 3. கி.பி.1927

D. செளிரி செளரா சம்பவம் 4. கி.பி.1920

(a) 1 2 3 4

(b) 4 2 3 1

(c) 4 3 2 1

(d) 1 3 2 4

**120. தண்டி கடற்கரையை காந்தி சென்றடைந்த நாள்**

(a) 5 ஏப்ரல் 1930

(b) 5 ஏப்ரல் 1932

(c) 25 ஏப்ரல் 1931

(d) எதுவுமில்லை

**121. நெறிமுறை கோட்பாடுகள் அரசியலமைப்பின் எந்த பகுதியில் உள்ளன?**

(a) பகுதி V

(b) பகுதி IV

(c) பகுதி III

(d) பகுதி IX

**122. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி.**

1. பாராளுமன்ற இரு அவை உறுப்பினர்களும் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடலாம்.

2. 30 வயது முழுமை அடைந்தவரே குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

3. குடியரசுத் தலைவர் ஆதாயம் தரும் எந்த ஒரு பதவியிலும் நீடிக்கக் கூடாது.

சரியான வாக்கியங்களை தேர்வு செய்க:

(a) 1 மட்டும்

(b) 1, 2 மற்றும் 3

(c) 3 மட்டும்

(d) 2 மற்றும் 3

**123. மாநிலங்களவையின் உறுப்பினர் ஆவதற்கான குறைந்தபட்ச வயது வரம்பு?**

(a) 25

(b) 30

(c) 35

(d) 50

**124. கீழ்காணும் வாக்கியங்களை கருதுக.**

1. அரசியலமைப்பு சட்டத் திருத்த மசோதா மாநில சட்ட மன்றத்தால் தொடங்கப்பட முடியாது.

2. நாடு முழுவதும் மாநில சட்டமன்ற அமைப்பு ஒரே மாதிரியானவை.

மேலே உள்ள வாக்கியத்தில் தவறான வற்றைத் தேர்ந்தெடு

(a) 1 மற்றும் 2

(b) 1 மட்டும்

(c) இரண்டும் சரி

(d) 2 மட்டும்

**125. கீழ்க்கண்டவற்றுள் மாநிலங்களுக்கு இடையேயான குழுவை பரிந்துரை செய்தது யார்?**

(a) பன்ஜி குழு

(b) சர்காரியா குழு

(c) தார் குழு

(d) மண்டல் குழு

**126. இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற அடிப்படையில் குடியரசுத் தலைவர் எந்த ஷரத்தின் கீழ் நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்துகிறார்**

(a) ஷரத்து 352

(b) ஷரத்து 355

(c) ஷரத்து 356

(d) ஷரத்து 360

**127. சரியான கூற்று எது?**

1. பல்வந்தராய் மேத்தாவால் மூன்றடுக்கு பஞ்சாயத்து முறை பரிந்துரைக்கப்பட்டது

2. அசோக் மேத்தாவால் இரண்டடுக்கு பஞ்சாயத்து முறை பரிந்துரை செய்யப்பட்டது

மேலே உள்ள வாக்கியங்களில் சரியான வற்றைத் தேர்ந்தெடு

(a) 2 மட்டும்

(b) 1 மட்டும்

(c) இரண்டும்

(d) எதுவுமில்லை

**128. எது சரியான கூற்று**

1. அட்டவணைப் பகுதியின் எல்லைகளை நாடாளுமன்றம் கூட்டலாம் அல்லது குறைக்கலாம்

2. அட்டவணைப்பகுதி என அறிவிக்கும் அதிகாரத்தை குடியரசுத்தலைவர் பெற்றுள்ளார்

மேலே உள்ள வாக்கியங்களில் சரியான வற்றைத் தேர்ந்தெடு

(a) 1 மட்டும்

(b) 2 மட்டும்

(c) இரண்டும்

(d) எதுவுமில்லை

**129. ஒரு மாவட்டத்தின் தலைமை செயலாட்சித்துறை தலைவர் யார்?**

(a) மாவட்ட ஆட்சியர்

(b) தலைமைச் செயலர்

(c) முதலமைச்சர்

(d) ஆளுநர்

**130. நீதிப்பேராணைகளை வழங்குவதற்கு உச்சநீதிமன்றம் அதிகாரம் பெற்றிருப்பது இதன் மூலமாக**

(a) அரசியலமைப்பு சட்டம் 126

(b) அரசியலமைப்பு சட்டம் 226

(c) அரசியலமைப்பு சட்டம் 32

(d) அரசியலமைப்பு சட்டம் 132

**131. குடியரசுத் தலைவரின் தடுப்பதிகார உரிமைகளில் உள்ளடங்காதவை?**

(a) முழுமையான தடுப்பதிகார உரிமை

(b) தகுதியான தடுப்பதிகார உரிமை

(c) தற்காலிக தடுப்பதிகார உரிமை

(d) மறைமுக உரிமை

**132. கீழ்க்கண்ட வாக்கியங்களில் ஆளுநர் பற்றிய தகவல்களில் சரியானவை?**

1. இவர் அரசியலமைப்பின் ரீதியாக ஒரு மாநிலத்தின் தலைவராவார்

2. இவர் மத்திய அரசின் பிரதிநிதியாவார்.

சரியான விடையைத் தேர்வு செய்க:

(a) 1 மட்டும்

(b) 2 மட்டும்

(c) இரண்டும்

(d) எதுவுமில்லை

**133. ஒரு பொருள் பூமியிலிருந்து நிலவுக்கு கொண்டு செல்லப்பட்டால் அதன்**

1. நிறை மாறுபடும் ஆனால் எடை மாறாது

2. நிறையும், எடையும் மாறுபடும்

3. நிறைமாறாது எடை மாறும்

4. அடர்த்தி மாறாது

இவற்றுள் எது அல்லது எவை சரி?

(a) 1 மட்டும்

(b) 2 மட்டும்

(c) 3 மற்றும் 4

(d) 2 மற்றும் 4

**134. குளிர்பதனப்பெட்டியில் உறைபெட்டி (Freezer) மேற்பகுதியில் பொருத்தப்படுகிறது.**

(a) அடிப்பகுதியில் உள்ள சூடான கம்ப்ரஸருக்கு தொலைவில் வைக்கப்பட வேண்டியது

(b) உகந்தது என்பதால்

(c) உட்பகுதி முழுவதையும் குளிரூட்டும் பொருட்டு

(d) சிறப்பான பணி எதுவுமில்லை.

**135. மாக் (Mach) எண் எவற்றின் வேகத்து டன் தொடர்புடையது?**

(a) ஒலி

(b) கப்பல்கள்

(c) ஆகாய விமானம்

(d) விண்வெளி ஓடம்

**136. பூமியும் நிலவும் சூரியனில் இருந்து சமதூரத்தில் இருந்தாலும் பூமி நிலவை விட அதிகம் வெப்பமாக இருக்கக் காரணம்**

(a) பூமியை விட நிலவு சிறியது

(b) நிலவு நீண்ட இரவுகளைக் கொண்டது

(c) நிலவுக்கு வளிமண்டலம் இல்லை

(d) நிலவின் பரப்பு இருளானது

**137. கணினியில் பயன்படும் ஐஊ சில்லுகள் எதனால் உருவாக்கப்படுகின்றன?**

(a) காரீயம்

(b) சிலிக்கான்

(c) குரோமியம்

(d) தங்கம்

**138. சில நைட்ரஜன் குறைபாடு உள்ள தாவரங்கள், பூச்சிகளை உண்டு தன் நைட்ரஜன் தேவையை பூர்த்தி செய்து கொள்கிறது. கீழ்கண்ட தாவரங்களில் எது எத்தகைய தாவரமாகும்?**

1. பிளாடர் வார்ட்
2. ஹார்ள்வார்ட்
3. பட்டர்வார்ட்
4. ஸ்பைடர் வார்ட்

மேலே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எவை சரியானவை?

(a) 1 மற்றும் 3

(b) 1 மற்றும் 4

(c) 2 மற்றும் 3

(d) 2 மட்டும்

**139. கார்பனை எங்கிருந்து தாவரங்கள் பெறுகின்றன.**

(a) சுற்றுச்சூழல் கார்பன்-டை ஆக்ஸைடு.

(b) கார்பன் மோனாக்சைடு.

(c) மண்ணில் இருந்து பெறுவது.

(d) கனிம கார்பன் மண்ணில் பெறுவது

**140. கர்ப்பகாலத்தில் கார்பஸ் லூடியம், அதிக அளவிலான ப்ரொஜஸ்டிரோனை சுரந்து அவை கர்ப்பப்பையில் உள்ள என்டோமெட்ரியம் வளர உதவி பின் திடீரென்று தேய்ந்து எத்தனை வாரத்தில் செயல்படும்**

(a) 14 வது வாரம்

(b) 16 வது வாரம்

(c) 11 வது வாரம்

(d) 12 வது வாரம்

**141. சிபிலிஸ் எனும் கலவியால் பரவும் நோய் எவற்றால் உண்டாகும்.**

(a) வைரஸ்

(b) பாக்டீரியா

(c) பூஞ்சை

(d) புரோட்டோசோவான்

**விடைகள்:** 110.b 111.c 112.b 113.c 114.a 115.d 116.b 117.a 118.c 119.c 120.a 121.b 122.c 123.b 124.b 125.b 126.a 127.c 128.b 129.a 130.c 131.b 132.c 133.c 134.c 135.a 136.c 137.b 138.a 139.a 140.d 141.b

டிஎன்பிஎஸ்சி | குரூப்- IV | மாதிரி வினா- விடை 7: பொது அறிவு

**142. அதிகளவில் சாராயத்தை உட்கொள்ளும் மனிதன் எதனால் இறப்பார்?**

(a) இரத்தப் புற்றுநோய்

(b) சிர்ரஹோசிஸ்

(c) கல்லீரல் & வயிற்றுப்புற்றுநோய்

(d) இதய சதைகள் வலுவடைந்து மாரடைப்பை உண்டாக்குதல்

**143. எரிவதற்கு உதவும் காற்றிலுள்ள வாயு**

(a) நைட்ரஜன்

(b) ஹீலியம்

(c) ஆக்சிஜன்

(d) ஹைட்ரஜன்

**144. நிழல்படத் தொழிலில் (photography) பயன்படுவது**

(1) வெள்ளி புரோமைடு

(2) சோடியம் தயோ சல்பெட்டு

(a) 1 மட்டும்

(b) 2 மட்டும்

(c) 1 மற்றும் 2

(d) எதுவுமில்லை

**145. நீரில் கரைந்துள்ள ஆக்சிஜனின் அளவு இத்தனை அளவுக்குக் குறையக் கூடாது**

(a) 4

(b) 3

(c) 5

(d) 2

**146. சிரிக்கும் வாயு என்பது**

(a) NO

(b) N2O2

(c) N2O

(d) N2O5

**147. GDP-யின் பகுதிகள் (Components)**

1. நுகர்வோர் செலவினங்கள்

2. அரசு செலவினங்கள்

3. தொழில் செலவினங்கள்

4. தொழில் முதலீடுகள்

சரியானவற்றைத் தேர்ந்தெடு

(a) 1 மற்றும் 2

(b) 3 மட்டும்

(c) 2 மற்றும் 4

(d) இவை அனைத்தும்

**148. தேசிய வருமானத்தைக் கணக்கிட 1949 ஆம் வருடம் எந்தக் குழு அமைக்கப்பட்டது?**

(a) தேசிய வருமான கணக்கீட்டு முறை

(b) தேசிய வருமான அலகு

(c) தேசிய வருமான குழு

(d) மத்திய புள்ளியியல் நிறுவனம்

**149. எது மூலதன செலவினம் இல்லை?**

(a) அரசின் கடன்பட்டுவாடா.

(b) அரசின் திட்டமிட்ட செலவினம்

(c) கடன் மீட்பு

(d) பொதுசேவைகள்

**150. இந்தியாவில் எந்த வகையான வரு மானவரி முறை பின்பற்றப்படுகிறது?**

(a) விகிதாச்சார வரி.

(b) முற்போக்கான வரி.

(c) பிற்போக்கான வரி.

(d) மறுபங்கீட்டு வரி

**151. கீழே உள்ளவற்றை கருத்தில் கொள்க.**

1. வளர்ந்த நாடுகளில் அதிகமான மக்கள் நகரங்களில் வசிக்கின்றனர்.

2. தொழிற்சாலைகளினால் கிராமத்தில் உள்ள மக்கள் நகரங்களை நோக்கி வருகின்றனர்.

சரியான குறியீட்டை தேர்ந்தெடுக்கவும்.

(a) 1 மட்டும்

(b) 2 மட்டும்

(c) 1 மற்றும் 2

(d) இதில் எதுவுமில்லை.

**152. பின்வரும் வாக்கியங்களைக் கருத்தில் கொள்க**

1. கிழக்குத் தொடர்ச்சி மலை, மேற்கு தொடர்ச்சி மலையை விட தாழ்வானது அதன் உயரமான சிகரம் ஆனைமுடி.

2. தக்காண பீடபூமியில் உள்ள ஆறுகள் மேற்கு தொடர்ச்சி மலையில் உருவானவை ஆகும்.

மேலே உள்ளவற்றில் எது தவறானது?

(a) 1 மட்டும்

(b) 2 மட்டும்

(c) 1ம் 2ம்

(d) 1ம் இல்லை 2ம் இல்லை

**153. உசாரா மண்ணில் அதிகம் காணப்படுவது?**

(a) சோடியம்

(b) பொட்டாசியம்

(c) மக்னீசியம்

(d) அனைத்தும்

**154. கீழே உள்ளவற்றை கருத்தில் கொள்க**

1. முதல் ஈய உருக்கு ஆலை பீகாரில் தொடங்கப்பட்டது

2. நாட்டில் 4 துத்தநாக உருக்காலைகள் உள்ளன.

இதில் எது சரி?

(a) 1 மட்டும்

(b) 2 மட்டும்

(c) 1 மற்றும் 2

(d) இரண்டும் இல்லை

**155. இவற்றில் யார் / எது முதலமைச்சர் மற்றும் அமைச்சரவை குழுவுக்கு பொறுப்பானது?**

(a) ஆளுநர்

(b) குடியரசுத்தலைவர்

(c) மாநில சட்டமன்றம்

(d) மாநில மக்கள்

**156. கீழ்க்காணும் தொடரினை கருத்தில் கொள்க**

1. குடியரசுத் தலைவரால் சட்டமன்றத்திற்கு மறு பரிசீலனை செய்யுமாறு திருப்பி அனுப்பப்பட்ட மசோதா மீண்டும் 14 மாதத்துக்குள் அனுப்ப வேண்டும்.

2. பண மசோதாவின் மீது குடியரசுத் தலைவர் தனது அனுமதி கொடுக்காமல் நிறுத்தி வைக்கலாம்.

எது சரியான கூற்று?

(a) 1 மட்டும்

(b) 2 மட்டும்

(c) 1 மற்றும் 2

(d) எதுவுமில்லை

**157. அரசியலமைப்பு திருத்த வரைமுறைப் பற்றி கூறும் ஷரத்து**

(a) ஷரத்து 356

(b) ஷரத்து 368

(c) ஷரத்து 370

(d) ஷரத்து 353

**158. மொய்யாறு எதன் உபநதியாகும்?**

(a) தாமிரபரணி

(b) பவானி

(c) வைகை

(d) காவேரி

**159. கடலோர மாவட்டங்கள் மழைக்காக அதிகம் நம்பியிருப்பது**

(a) காற்றழுத்த தாழ்வுநிலை

(b) புயல் மழை

(c) இரண்டையும்

(d) எதுவுமில்லை

**160. பின்வரும் எந்த பகுதியில் மேற்கு தொடர்ச்சி மலைகளும், கிழக்கு தொடர்ச்சி மலைகளும் ஒன்றிணை கின்றன?**

(a) ஜவ்வாது மலைகள்

(b) சேர்வராயன் மலைகள்

(c) நீலகிரி மலைகள்

(d) குன்டா மலைகள்

**161. பொருத்துக**

A. சந்திர குப்த மௌரியர் - 1. கிறிஸ்தவம்

B. அசோகர் - 2. அஜீவிகா

C. பிந்துசாரா - 3. புத்த மதம்

D. அலெக்சாண்டர் - 4. சமணம்

குறியீடுகளை தேர்ந்தெடு:-

(a) 4 1 2 3

(b) 1 2 3 4

(c) 1 4 2 3

(d) 4 3 2 1

**162. போர்ச்சுகீசியக் கடல் பயணியான வாஸ்கோடகாமா இந்தியா வருவதற்கு வழிகாட்டியவர்**

(a) அப்துல் மஸ்ஜித்

(b) முகமது

(c) கொலம்பஸ்

(d) அப்துல் சமந்த்

**163. பொருத்துக**

A. முதற் சங்கம் - 1. கபாடபுரம்

B. இரண்டாம் சங்கம் - 2. மதுரை

C. தொல்காப்பியம் - 3. தென் மதுரை

D. மூன்றாம் சங்கம் - 4. தொல்காப்பியர்

குறியீடுகளைத் தேர்ந்தெடு:-

(a) 2 1 4 3

(b) 3 1 4 2

(c) 3 2 4 1

(d) 1 2 4 3

**164. நான்காவது புத்த மாநாடு யார் தலைமையில் நடத்தப்பட்டது?**

(a) வசுமித்ரா

(b) அஸ்வகோஷ்

(c) அசோகா

(d) அஜாதசத்ரு

**165. இரண்டாம் புலிகேசி எந்த பல்லவ அரசரால் தோற்கடிக்கப்பட்டார்**

(a) முதலாம் நரசிம்மவர்மன்

(b) முதலாம் மகேந்திரவர்மன்

(c) சிம்ம விஷ்ணு

(d) இரண்டாம் நந்திவர்மன்

**166. சரியான பொருத்தத்தை கண்டுபிடி**

(a) சேக்கிழார் - சீவகசிந்தாமணி

(b) ஜெயங்கொண்டார் - மூவருலா

(c) ஒட்டக்கூத்தர் - கலிங்கத்துப்பரணி

(d) புகழேந்தி - நளவெண்பா

**167. கீழ்காணும் வரிகளைக் கவனத்தில் கொள்க.**

1. இவர் லாக்தாதா அல்லது லாக் பாக்ஸ் என்று அழைக்கப்பட்டார்

2. இவர் ஹசன் நிஜாமி என்ற அறிஞரை ஆதரித்தார்

3. இவர் குதுப்மினாரை முழுமையாகக் கட்டினார்

4. போலோ விளையாட்டின் போது குதிரை யிலிருந்து கீழே விழுந்து இறந்தார்

மேலுள்ளவற்றில் எது குத்புதீன் ஐபக் பற்றிய சரியான கூற்று ஆகும்.

(a) 1, 3, 2

(b) 1, 2, 3

(c) 1, 2, 4

(d) அனைத்தும்

**168. ஜிஸியா தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கவனத்தில் கொள்க**

1. ஜிஸியா தொடக்கத்தில் நிலவரியின் அங்கமாக வசூலிக்கப்பட்டது

2. பிரோஸ் துக்ளக் இதை நிலவரியில் இருந்து பிரித்தார்

3. பிரோஸ் துக்ளக் ஜிஸியாவை தனி வரியாக வசூலித்தார்

4. பிராமணர்கள் ஜிஸியா வரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டார்கள்

சரியானவற்றை தேர்ந்தெடுக்க

(a) 1, 2, 3

(b) 2, 3, 4

(c) 1, 2, 4

(d) அனைத்தும்

**169. அன்னி பெசன்ட் அம்மையார் பிரம்மஞான சபையின் தலைவரான ஆண்டு**

(a) 1897

(b) 1875

(c) 1907

(d) 1917

**170. எதற்காக ரபீந்திரநாத் தாகூர் தனது “நைட்குட்” பட்டத்தைத் துறந்தார்**

(a) கிலாபாத் இயக்கம்

(b) ஜாலியன் வாலாபாக் படுகொலை

(c) ரௌலட் சட்டம்

(d) எதுவுமில்லை

**171. பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்க**

1. டொமினியன் அந்தஸ்தை முக்கியமான கோரிக்கையாக அறிவித்தல்

2. மொழிவாரியான மாகாணங்களை உருவாக்குதல்

3. மத்தியில் முழு பொறுப்புள்ள அரசாங்கத்தை அமைத்தல்

மேற்காண்பவைகளில் நேரு அறிக்கையின் மூலம் சமர்பிக்கப்பட்ட கோரிக்கை எது? எவை?

(a) 1 மட்டும்

(b) 1 மற்றும் 3

(c) 2 மற்றும் 3

(d) இவை அனைத்தும்

**172. பொருத்துக**

A. 3 வது வட்ட மேசை மாநாடு - 1.1934

B. பூனா ஒப்பந்தம் - 2. 1931

C.1 வது வட்ட மேசை மாநாடு - 3. அம்பேத்கர்

D. சட்ட மறுப்பு இயக்கத்தை திரும்ப பெறுதல் - 4. 1932

(a) 1 2 3 4

(b) 4 1 2 3

(c) 4 3 2 1

(d) 1 3 4 4

**விடைகள்:** 142.b 143.c 144.c145.a 146.c 147.b 148.c 149.c 150.b 151.c 152.a 153.d 154.d 155.c 156.b 157.b 158.b 159.c 160.c 161.d 162.b 163.b 164.a 165.a 166.d 167.c 168.d 169.c 170.b 171.d 172.b

டிஎன்பிஎஸ்சி | குரூப்-IV | மாதிரி வினா-விடை 8: பொது அறிவு

**173. இந்திய தொகுப்பு நிதியிலிருந்து (Consolidate Fund) செலவு செய்ய அனுமதி அளிப்பது யார்?**

(a) குடியரசுத் தலைவர்

(b) பாராளுமன்றம்

(c) கணக்கு மற்றும் தணிக்கை தலைமை அலுவலர்

(d) நிதியமைச்சர்

**174. திட்ட ஆணையம் உருவாக்கப்பட்டது?**

(a) அமைச்சரவை தீர்மானம்

(b) பாராளுமன்ற தீர்மானம்

(c) குடியரசுத் தலைவரால்

(d) பிரதம அமைச்சரால்

**175. தேர்தல் பிரச்சினைகளை தீர்ப்பது**

(a) குடியரசுத் தலைவர்

(b) லோக் சபை

(c) தேர்தல் ஆணையம்

(d) பிரதம அமைச்சரால்

**176. கீழ்காணும் வாக்கியங்களை கவனி.**

1. ஆளுநர் அனைத்து பண மசோதாக்களையும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைப்பார்.

2. சட்டப்பேரவையில் பண மசோதா குறித்து சபாநாயகர் எந்த முடிவும் எடுக்க மாட்டார்.

மேலே கொடுக்கப்பட்ட வாக்கியத்தில் எந்த வாக்கியம் சரி

(a) 1 மட்டும்

(b) 2 மட்டும்

(c) 1 மற்றும் 2

(d) இரண்டும் இல்லை.

**177. பின்வரும் வாக்கியங்களில் காண்க**

1. இந்தியாவில் 25 உயர்நீதிமன்றங்கள் உள்ளன

2. ஹரியாணா மற்றும் சண்டிகருக்கு பொதுவான உயர்நீதிமன்றம் உள்ளது

3. டெல்லிக்கு தனியாக உயர்நீதிமன்றம் உள்ளது

மேலே கொடுக்கப்பட்ட வாக்கியத்தில் எந்த வாக்கியம் சரி

(a) 2 மற்றும் 3

(b)1 மட்டும் 2

(c) 1, 2, 3

(d) 3 மட்டும்

**178. கீழ்க்காணும் வாக்கியங்களை கவனி:**

கூற்று (A) : அரசியலமைப்பை திருத்தம் செய்யும் வரம்பற்ற அதிகாரத்தை பாராளுமன்றம் பெற்றிருக்கவில்லை

காரணம் (R) : அடிப்படை கட்டமைப்பு மாறாமல் அரசியலமைப்பின் எந்த பகுதியையும் திருத்தும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு உள்ளது என உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

**சரியான விடையைத் தேர்ந்தெடு**

(a) A சரி ஆனால் R தவறு

(b) A மட்டுமே சரி

(c) R மட்டுமே சரி

(d) A மற்றும் R இரண்டும் சரி. R என்பது A க்கு சரியான விளக்கம்

**179. 73-வது மற்றும் 74-வது சட்ட திருத்தம் தொடர்பாக எது தவறான கூற்று**

1. உள்ளாட்சி அரசாங்கத்தில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு கட்டாயமாக்கியது

2. மாநிலம், பின் தங்கிய வகுப்பு சார்ந்த சட்டங்களை உள்ளாட்சி அரசுக்காக இயற்றலாம்

மேலே கொடுக்கப்பட்ட வாக்கியத்தில் எந்த வாக்கியம் சரி

(a) 1 மட்டும்

(b) 2 மட்டும்

(c) இரண்டும்

(d) எதுவுமில்லை

**180. புதிய மாநிலங்களை உருவாக்க தேவையான பெரும்பான்மை**

(a) சிறப்பு பெரும்பான்மை

(b) சாதாரண பெரும்பான்மை

(c) சிறப்பு பெரும்பான்மை மற்றும் மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளுதல்

(d) மேற்கண்ட எதுவுமில்லை

**181. எந்த ஷரத்து மற்றும் பகுதி ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கிறது**

(a) ஷரத்து 370 பகுதி XXII

(b) ஷரத்து 370 பகுதி XXI

(c) ஷரத்து 356 பகுதி XXI

(d) ஷரத்து 358 பகுதி XXII

**182. மொழிவாரி சிறுபான்மையினர் ஆணையம் எப்போது உருவாக்கப்பட்டது? எங்கு அமைந்துள்ளது**

(a) 1950, புதுடெல்லி

(b) 1957 அலகாபாத்

(c) 1957 ஜம்மு

(d) 1950 இம்பால்

**183. எந்த சட்டத்திருத்தத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான ஆணையங்கள் தனித் தனியாக பிரிக்கப்பட்டன?**

(a) 89 - வது சட்டத்திருத்தம் 2003

(b) 99 - வது சட்டத்திருத்தம் 2006

(c) 79 - வது சட்டத்திருத்தம் 1998

(d) 86 - வது சட்டத்திருத்தம் 2002

**184. ஒரு பொருளின் எடை**

1. பூமியின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும்.

2. துருவங்களில் அதிகமாக இருக்கும்

3. நிலநடுக்கோட்டுப் பகுதியில் அதிகமாக இருக்கும்.

4. சமவெளியை விட மலைகளில் குறைவாக இருக்கும்

மேற்கண்டவற்றுள் எது அல்லது எவை சரி?

(a) 1 மட்டும்

(b) 2 மற்றும் 4

(c) 3 மற்றும் 4

(d) எதுவுமில்லை

**185. ஓர் அறையிலுள்ள உலோகத்தால் ஆன மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ள காபி கீழ்க்காணும் எந்த முறைகளில் வெப்பத்தை இழக்கின்றது.**

(a) வெப்பக்கடத்தல் மற்றும் வெப்பக்கதிர் வீசல்

(b) வெப்பக்கடத்தல் மற்றும் வெப்பச் சலனம்

(c) வெப்பச்சலனம் மற்றும் வெப்பக்கதிர் வீசல்

(d) வெப்பக்கடத்தல், வெப்பச்சலனம், வெப்பக்கதிர்வீசல் மற்றும் ஆவியாதல்

**186. மழை பெய்தபின் வானவில் எந்தப் பக்கம் தோன்றும்?**

(a) சூரியனின் திசை நோக்கி

(b) சூரியனுக்கு எதிர்த் திசையில்

(c) எந்த பக்கம் வேண்டுமானாலும் (சூரியன் எங்கிருந்தாலும்)

(d) சூரியன் இல்லாதபோது.

**187. சூரிய கிரகணம் நடப்பது எப்போது**

(a) சூரியனுக்கும், பூமிக்கும் நடுவே நிலவு வரும்போது.

(b) சூரியனுக்கும் நிலவுக்கும் நடுவே பூமி வரும்போது.

(c) பூமிக்கும் நிலவுக்கும் நடுவே சூரியன் வரும்போது.

(d) சூரியன், நிலவு, பூமி நேர்கோட்டில் அமையாதபோது.

**188. ஒரு காரில் குளிர்விப்பானின் பணி என்ன?**

1. நீரின் கொதி நிலையை அதிகரிக்கிறது.

2. நீரின் உறைநிலையை குறைக்கிறது.

3. என்ஜினில் உள்ள உலோகங்கள் துருப்பிடிப்பதை குறைக்கிறது.

4. பெட்ரோல் உபயோகத்தைக் குறைக்கிறது.

(a) 1 மற்றும் 2

(b) 1, 2 மற்றும் 3

(c) 1,2 மற்றும் 4

(d) 1,3 மற்றும் 4.

**189. மண்ணீரல் (Spleen) செரிமான செயல்பாடு கீழ்வரும் எதோடு தொடர்புடையது?**

(a) டியோடினல் லூப்

(b) ஈரல் (Liver)

(c) கணையம் (Pancreas)

(d) சிறுநீரகம் (Kidney)

